Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 328 20.03.2001 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களுக்கு தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்
உமையாள்
ஜூவல் ஹவுஸ்
மார்க்கட் ரோட், ...டிருப்பு -
களுவாஞ்சிக்குடி,
Advt.

## கோரகல்லிமடுவில் சமாதான நாடகத்திற்கு அனுமதியில்லை!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோரகல்லிமடுவில் இயங்கி வரும் தடாகம் தொண்டர் நிறுவனத்தின் அலுவலகத்தில் நேற்று காலை அனுராதபுரம் தலாவ என்னுமிடத்திலிருந்து சென்ற சிங்கள இளைஞர்களால் நடத்தப்பட்ட வீதி நாடாகத்தில் சிலர் படையினரின் சீருடை அணிந்து நடித்ததனால் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்

அனுராதபுரம் தலாவ என்னுமிடத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கி வரும் 'சாமசேவய கலாசார அமைப்பு' இரத்தக் கண்ணீர் என்னும் வீதி நாடகத்தை நடத்தி வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் சில இடங்களில் இந்த நாடகத்தை நடத்தும் நோக்கில் கோரகல்லிமடுவில் தடாகம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் நாடகத்தை ஆரம்பித்தது.

இந்த நாடகம் படையினர் வேறு நாடொன்றுடன் போர் புரிவதாகவும், படையினர் அந்த நாட்டுப் பொதுமக்கள் மீது பலாத்காரம், அட்டூழியம் என்பனவற்றைப் புரிவதாகவும் அமைந்துள்ளது.

படையினரின் வேடம் தாங்கி நடிப்பவர்கள் படையினரின் சீருடையை அணிந்தே நடித்துள்ளனர். இதை அப்பகுதியில் வீதிரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் இவர்களை சந்திவெளி படைமுகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்ததுடன் மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனை காகித ஆலையில் அமைந்துள்ள 23-2 பிரிகேட் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இந்நிறுவனத்தின் தேசிய செயலாளர் சம்சன் ஜெயசிங்க, நடிகைகளான கமலாவதி ஏக்கநாயக்க, சந்திரிகா மதுவந்தி, சுபத்திரா இராஜசிங்க ஆகியாருடன் தடாகம் அலுவலக ஊழியர்களான வி.ரமேஸானந்தன், பி.எல். சந்திரபால ஆகியோரே வாழைச்சேனை 23-2 ஆவது படைமுகாமில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(8ம் பக்கம் பார்க்க)

# மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியமனையை மூடிவிட முடிவு!

## தமிழ் நோயாளர்கள் அதிருப்தி

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலையை எதிர்வரும் 28ம் திகதியுடன் மூடிவிடுவதற்க்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரடங்கள் தெரிவித்துள்ளன.**

மட்டக்களப்பு மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சிங்கள் நோயார்கள் தங்களை கொழும்பில் உள்ள ஹெந்தல தொழுநோயாளர் வைத்தியசாலைக்கு மாற்றுமாறு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக நேற்று காலை மட்டக்களப்பு இராணுவ கட்டளை அதிகாரி அலுவலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் வைத்தியசாலைக்க அறிவித்ததாகவும் தெரிவிக்க ப்படுகிறது.

எதிர்வரும் 28ம் திகதி சகல நோயாளர்களையும் வலையிறவு பாலத்தடியில் கையளிக்குமாறும் அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் தொலைபேசி மூலம் அழைப்பு கிடைத்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெலிசற ராகமயிலுள்ள பணிப்பரளர் அலுவலகத்தில் இருந்து குழுவொ ன்று எதிர்வரும் 23ம் திகதி வர்விருப்பதாகவும் இக்குழுவில் வைத்தியசாலையை மூடுவதற்கான நடவடிக்கையை மேற் கொள்வதுடன் நோயாளர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## அறுதிப் பெரும்பான்மையின்றி ஒன்பது மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

(நமது நிருபர்)

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று பாராளுமன்றத்தில் விடப்பட்ட போது ஒன்பது மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்த கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.எதிர் கட்சிகள் எதிராக வாக்களித்தன.

நேற்று மாலை வரவு செவுத் திட்டம் மீதான விவாதம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு சபையில் விடப்பட்டபோது ஆதரவாக 115 வாக்குகளும் எதிராக 106 வாக்குகளும் கிடைத்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ,ஈ.பி.டி.பி, ஆகியன ஆதரவாக வாக்களித்தன.

ஐக்கிய தேசிய கட்சி,தமிழர் விடுதலைக் கூட்டணி,ரெலோ,தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.சிஹல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதே சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஆனந்தசங்கரி, வெளிவிவகார அமைச்சர் லகஷ்மன் கதிர்காமர்,ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை இன்று தொடக்கம் குழுநிலை விவாதம் நடைபெறும்.பத்தொன்பது நாட்களுக்கு இவ்விவாதம் நடைபெற்று ஏப்ரல் 11ம் திகதி மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கொடுப்பு இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அரசு போரை நிறுத்த வேண்டும் அன்ரன் நோர்வே தூதுவரிடம் தெரிவிப்பு

(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழலை உருவாக்க அரசாங்கமும் யுத்தநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் வீசேட துாதர் எரிக் சொல்ஹெய்மிடம் மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

லண்டனில் நேற்று முன்தினம் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த சொல்ஹெய்ம் அவருடன் சில மணிநேரம் கலந்துரையாடினார்.

தமது அமைப்பு ஒருதலைப்படசமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக இலங்கை அரசும் யுத்த நிறுத்தத்தை அறிவித்தால் பேச்சுக்கள் சுமுகமாக இடம்பெற வாய்ப்புக்கள் கிட்டும் என்று அச்சமயம் அன்ரன் பாலசிங்கம் தூதரிடம் வலியுறுத்தினார்.

பேச்சுக்கான திகதி மற்றும் கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பான பணியை இலங்கை அரசாங்கமே செய்ய வேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் நோர்வேத் துாதரிடம்

(8ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு மேலும் 8மல்ரி பரல்கள்

(நமது நிருபர்)

8 'மல்ரி பரல்கள்' செக் குடியரசிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகை ஆயுத தளபாடங்கள் கொழும்புக்கு எடுத்து வரப்படுவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

பல்குழல் எறிகணை செலுத்திகள் எட்டு, ரீ 55 ரக பீரங்கிகள் இரண்டு டசின், பாலங்களை அமைக்க உதவும் டாங்கிகள் இரண்டு, நடமாடும் பொறியியல் வாகனங்கள் இரண்டு என்பனவே தற்சமயம் கொழும்புத் துறைமுகம் நோக்கி

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நெதர்லாந்து தலைவரைச் சந்தித்துப் பேச்சு

(நமது நிருபர்)

வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று நெதர்லாந்து தலைவரைச் சந்தித்து இரு தர்ப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

கரையோரப் பிரதேசங்களுக்கு நீர்,நில முகாமைதுவம் மற்றும் அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி இரு நாட்டு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தியதாக கூறப்படுகிறது.

இதேவேளை நெதர்லாந்து பாராளுமன்றம் சர்வதேச நீதிமன்றம் என்பவற்றிக்கும் ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதை சிங்களவர்கள் அங்கீகரிக்கக்கூடாது

-சிஹல உறுமய



அப்பபின்ன பிரிச்சு தீர்வு காணுறதுதான் ஒரேவழி இதத்தான் நாங்களும் சொல்லுறம்..........

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
. மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## மனித உரிமைமீறல்களில்லையா?

ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உபதேசம் செய்பவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் ஜனநாயக விரோதமான செயல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக ஏன் குரல்கொடுக்க முன்வருவதில்லை.

தமிழ்ப் பகுதிகளில் எவரையும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கைது செய்து தடுத்து வைக்கலாம்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு சில மாதங்களுக்குத் தடுத்து வைக்கப்படுபவர்கள் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கவேண்டுமென்று பொலிஸார் நீதிமன்றத்தில்மனுச் செய்வர். இந்த மனுவை நீதிபதியும் ஏற்று முதலில் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் சிறையிலிருந்தவர்கள் மீண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காலவரையின்றித் தடுத்து வைக்கப்படுவர்.

ஒருவரைக் கைது செய்வதற்கும் அவரைத் தடுத்து வைப்பதற்கும் சட்டவிதி முறைகள் பற்றி எல்லாம் பேசப்படுகிறது.

ஒருவரைக் கைது செய்தால் எதற்காகக் கைது செய்யப்படுகிறார் என்று அவருக்குத் தெரிவிக்கப் படவேண்டும், அவர் எங்கே கொண்டு செல்லப்படுகிறார் அல்லது எங்கே கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகிறார் என்பது அவரது நெருங்கிய உறவினருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்பது விதிமுறைகளிலிருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதாயின் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திலுள்ளவர்தான் கைது செய்யவேண்டுமென்ற விதியிருக்கிறது.

இதனால் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஒருவரை சுலபமாகக் கைது செய்து ஒன்பது மாதகாலத்துக்கு எந்தவிதத் தடையுமில்லாமல் காவலில் வைத்திருக்கலாம்.

இதன்பின் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க அனுமதிகோரிக் காலவரையறையின்றித் தடுத்து வைக்கின்றார்கள்.

இவை எந்த வகை ஜனநாயகம்? இவை மனித உரிமைகளை மீறலில்லையா?

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசிய இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் கைதுகள் பற்றியும் அவர்கள் காலவரையின்றித் தடுத்து வைப்பது பற்றியும் ஏன் கேட்பதில்லை?

ஆண்டுக் கணக்காக எத்தனை தமிழ் இளைஞர்கள் எதுவித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் விசாரணை எதுவுமில்லாமல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

வாழ்நாளில் முக்கியமான இளைமைப்பருவத்தை சிறைகளில் கடும் குற்றவாளிகளுடன் கழிக்கும் தமிழ் இளைஞர்கள் வெளியே வரும்போது எப்படி வருவார்கள்? அவர்கள் வெளியே வந்து எந்த அளவுக்கு சமுதாயத்துக்குப் பயன்படுவார்கள்?

சமீபத்தில் வவுனியா அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சென்ற இரு இளைஞர்கள் அடையாளம் தெரியாத ஒரு கும்பலினால் கைது செய்யப்பட்டுக் கண்களையும் கைகளையும் கட்டிக் கடத்திச்செல்லப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சில தினங்களுக்குப் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் எந்தக் குற்றச் சாட்டுக்களும் இல்லையென்றும் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்தியவர்கள் பொலிஸார் என்பதை கண்டறிந்து வவுனியா மாவட்ட நீதவான் அவர்களை எச்சரித்தது வேறு விஷயம்.

ஆனால் ஆஸ்பத்திரிக்கு சென்ற இளைஞர்களை எதுவித காரணம் இன்றி கைது செய்து கண்களையும் கைகளையும் கட்டி இழுத்துச் சென்ற எந்தச் சட்ட விதிகளின் கீழ் நடந்தது?

இது ஒரு சம்பவம் இது போன்ற சம்பவங்கள் வடக்கிலும் கிழக்கிலும் சர்வசாதாரணமாக நடக்கின்றன.

ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உபதேசம் செய்யும் உள்நாட்டு பிரமுகர்களுக்கும் வெளிநாட்டு பிரமுகர்களுக்கும் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றித் தெரியாமல் போவது ஏன்? தெரிந்தும் அவற்றிற்கு அங்கீகாரம் அளிக்கின்றனரா?

# கடற்கரையில் கடலை விற்கும் சிறுவர்களையும் கூட..........

## நாங்கள் தியாகம் செய்யும் சிறுவர்கள் விவரணச்சித்திரம் பற்றி ஒரு விமர்சனம்

அண்மையில் நான் பார்த்த பாரதிபடத்தின் பின் தமிழ்ச் சினிமா பற்றிய சிறிய நம்பிக்கை ஒளிகீற்று என்னுள் எழுந்து அலைமோதிக் கொண்டிருந்த வேளைதான், ''நாங்கள் தியாகம் செய்யும் சிறுவர்கள்'' என்ற விபரணப்படம் பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

அந்தப் படத்தைப் பார்த்த பின் அந்த அனுபவங்களை நாலு பேருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆகர்ஷிப்பு என்னுள் முளை விட்டுக் கொண்டிருந்த வேளை; மங்களேஸ்வரியின் குறிப்பொன்றை தினக்கதிரில் பார்த்த பிற்பாடு என் மனதிற்குள் குத்தி நெருடிய எழுகையை மங்களேஸ்வரியின் கருத்தை ஒட்டிச் சில கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் போல ஓர் உணர்வு எழுந்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி கிரேஸ் போரி (Grace Poore)யினால் தயாரிக்கப்பட்ட விவரணச்சித்திரத்திலும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முழுப்பார்வையையும் தந்திருக்கும் நல்லதோர் விவரணச் சித்திரம் காலங்காலமாய் மூடி மறைக்கப் பட்டு வந்த போலித் தனங்களை வெளிச்சத்திற்கு கொண்டிருக்கும் இம்முயற்சி பாராட்டப் பட வேண்டிய ஒன்று. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி கட்டுரைகள், கலந்துரையாடல்கள், மேடை பேச்சுக்களும் வெறும் உப்புச்சப்பில்லாமல் வார்த்தை ஜாலங்களாகவே

**த.மலர்ச்செல்வன்**

இருந்து வருகின்ற சூழலில் இப்பிரச்சினையை ''கமராவுக்குள்'' உள்வாங்கி காட்சிப் படுத்தியிருப் பது பார்ப்பவர்களின் மனதில் ஏதோ செய்கிறது.

பெரும்பாலும் இவ் விவரணப்படத்தில் பத்திலும் குறைந்த பெண்பிள்ளைகளுக்கு எதிராக நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகம், பலாத்காரம் பற்றிய கதையாடல்களே இடம் பெறுகின்றன. நம்ப முடியாத பல விடயங்களை நிஜத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றன. ஒரே குடும்பத்திற்குள் கூட்டுக்குடும்பமாக இருந்த ஏழு' வயது நிரம்பிய பெண்பிள்ளை தனது தாய்மாமனால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுகிறாள். இச்சம்பவம் பற்றி தனது பாட்டியிடம் சொல்லியும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாமல் அந்தச் சின்னஞ்சிறிய மொட்டு கருகிப்போகிறது. ''அப்பாவிடம் சொல்லாதே, அப்பா மாமாவை கொன்று விடுவார்'' இவ்வாறான பிற்போக்குத்தனமான சிந்தனையை அந்த பாட்டி தனது பேத்திக்கு விதைப்பதனால் பாலியல் துஷ்பிரயோகம் நீண்டு போவதைக் காணலாம். ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு சிறு பிள்ளையை பலிக்கடாவாக மாற்ற நினைக்கும் பாட்டி தனது இனம் பற்றி அல்லது தனது பால் வர்க்கம் பற்றியோ சிந்திக்காமல் ''மாமாவை'' காப்பாற்ற நினைப்பது அப்பத்தமானது.

இது போல் தனது மகளையே ''ருசித்த'' தந்தையின் கொடூரத்தை வெளியுலகத்திற்கு காட்டத் தயங்கிய அல்லது காட்டினால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினால் தன்னுள்ளே அமுக்கி விட்ட ஒரு பெண்ணின் கதையாடலும்....உயர் அந்தஸ்திலுள்ள மேட்டுக்குடி வாழ்வை வாழும் ஒருவரினால் பலியாகிப் போன ஒன்பது வயதுச்சிறுமி தனக்கு நடந்த துரோகத்தை வெளிப்படுத்தினால் நம்பமாட்டார்கள். ஏனெனில் குறிப்பிட்ட சமூகத்தினால் மதிக்கப்படுபவள் என்ற பல்வேறு காரணங்களினால் இரும்புச் சட்டத்திற்குள் அமுங்கிப் போகின்றன.

இவ்வாறான விவரணச் சித்திரத்தைப் பார்க்கும் போது இன்னொரு விடயமும் தெரிந்தது. பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்வாங்கப்பட்டவர்களில் பலர் பலதடவை இரையாகியிருப்பதும், இதன் காரணமாக வாழ்வையே தொலைக்க வேண்டிய நிலைப்பாடும் இந்தத் தூண்டலினால் அவர்கள் அதற்கு அடிமையாவதையும் அவதானிக்க முடிந்தது. எனினும் இந்தப் படத்தைப் பார்க்கும் பலருக்கு பல கேள்விகளும் சந்தேகங்களும் எழலாம். மங்களேஸ்வரி சொல்வது போல் ''இவ்விவரணப்படம் ஆங்கில மொழியில் இருந்தாலோ என்னவோ கலந்துரையாடலின் போது சிலர் இது பற்றி இங்கு கலந்துரையாடல் தேவையா? இது தவிர வேறு பல பிரச்சினைகள் எம்முன்னே உள்ளதென்ற கருத்தும் வந்தது.

இவ்வாறான கருத்து முன்வைப்பு போலித்தனமானவை. அன்னியக்கலாசாரத்தின் வருகையின் பிற்பாடு எமது கலாசாரத்திற்குள் ஊடுருவியிருக்கும் பல தீயசக்திகளின் வருகையின் பிற்பாடு இப்பிரச்சினை மேற்கிளம்பியிருக்கின்றன. தந்தை மகளை, மாமா மருமகளை, அண்ணன் தங்கையை, பக்கத்து வீட்டுக்காரன் எதிர்வீட்டுப் பெட்டையை.... .இவ்வாறான துஷ்பிரயோகம் அன்றாடம் எமது பிரதேசத்தில் (நாட்டில்) நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வுதான். இது அன்னிய மண்ணிலே தான் நடைபெறுகிறது.

இங்கு நடைபெறவில்லையென சாட்டுச் சொல்ல முடியாது. பத்திரிகைகளும், செய்திகளும் இதற்குச் சான்று பகரும் போது நாம் இன்னும் இன்னும் போலித்தனமான உட்செல்லுகைக்குள் தாவுவது எத்தனை தகும்! இந்தப் படத்திலும் முகத்தைக்காட்டத் தயங்கும் ஒரு சிலரைப் போல் முகத்தைக்காட்டத் தயங்காத பலரைப்போலவே எமது பிரதேசத்திலும் இப்பிரச்சினை பல வெளிச்சத்திற்கு வராமலும் சமூக அந்தஸ்து காரணமாகவும் மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றன, மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. இருந்தும் சில பெண் அமைப்புக்களின் வருகையும், சமூகமயப்பட்ட மனிதங்களின் உரத்துப் பேசுதலும் வெளியுலகத்திற்கு சிலதை வெளிச்சத்திற்கு காட்டி வருகின்றன. எது எப்படியிருப்பினும் மனித மனத்தில் மாற்றம் ஏற்படாதவரை எவ்வாறான முயற்சிகளும் வெறும் கானல்நீராகத்தானிருக்கும்.

மேலும் இந்த விவரணச் சித்திரம் பற்றிய சில குறைகளும் இல்லாமலில்லை. விவரணப்படம் உத்தி முறையை கையாளல் தொடர்ச்சியான உரையாடலும் கடின ஆங்கிலச் சொற்பதங்களும் பல்வேறு காரணங்களால் பார்வையாளரை அலுப்புத்தட்டச் செய்கின்றன. குறிப்பிட்ட காலப்பிரச்சினையை காட்சிப் படுத்தலினூடாக கோர்த்திருந்தால் இந்த விவரணம் இன்னும் கூடுதலான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கும். அத்தோடு இவ்விபரணம் முழுக்க முழுக்க பெண் சிறுவர் மயப்பட்ட பிரச்சினையை மையப்படுத்தியதாகவே உள்ளது. ''நாங்கள் தியாகம் செய்யும் சிறுவர்கள்'' என்ற பதத்தை உள்வாங்கி விவரணமாக்கப்பட்டிருப்பதால் எத்தனையோ ஆண் சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகத்தால் வாழ்வையே நாஷப்படுத்துகின்றனர். ''கடற்கரையில் கடலை விற்கும் எத்தனையோ சிறுவர்கள், வழிகாட்டிகள் என்ற போர்வையில் எத்தனையோ சிறுவர்கள் வெள்ளைத்தோலுக்குப் பலியாகின்றார்கள். நாலு சுவர்களுக்குள் நாசமாகும் எத்தனையோ பிஞ்சு ஆண்குறிகள் முறிந்து போகின்றன. இவற்றையும் இதனூடாக வெளிக்கொண்டு வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற கோதாவில் வெளிவரும் போது யாவற்றையும் காட்சிப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். பெண் தயாரிப்பாளரினால் வெளிப்படுத்துவதனால் பெண்சார் பிரச்சினை வெளி வந்திருக்கலாம்.

எப்படியிருப்பினும் ''நாங்கள் தியாகம் செய்யும் சிறுவர்கள்'' The Children we sacrifice நல்லதொரு விவரணச் சித்திரத்தை தந்துள்ளது என்பதை துணிந்து கூறலாம்.

□□□

# ஊடகங்களின் வெளிப்பாட்டுத் தன்மை மீது சந்திரிகா அவநம்பிக்கை ஏற்படுத்தி விட்டார்

(நமது நிருபர்)

நியூயோர்க்கில் இயங்கும் ஊடகவியலாளரைப் பாதுகாப்பதற்கான அமைப்பு, ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தித் தணிக்கை விதிமுறைகளைக் கண்டித்துள்ளது. "இது அடிப்படையில். ஊடகத்துறை மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையே" என அவ்வமைப்புச் சாடியுள்ளது.

ஊடகவியலாளர்கள்மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள், அடிப்படையில் ஊடகத்துறைக்குத் தீங்கு விளைவிப்பவையே எனவும் அவ்வமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் ஊடகத்துறையினர் எதிர்கொண்டு வரும் எண்ணற்ற சவால்களுள், ஜனாதிபதி கடைப்பிடிக்கும் செய்திக் கட்டுப்பாடு பெரும் கட்டுப்பாடாகவே உள்ளது. 17 ஆண்டுகாலமாக இலங்கையில் நீடித்து வரும் போர் பற்றிய செய்திகள், அடிக்கடி அறிவிக்கப்படும் செய்தித் தணிக்கைகளால் மிகக் குறுகியதாகவே அமைந்துள்ளன.

இதேவேளை, செய்தியாளர்கள் மீதான தாக்குதல்களும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. 2000 ஆண்டு ஒரு ஊடகவியலாளர் கொல்லப்பட்டுள்ளார் மற்றும் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

2000 ஆண்டு மே 3ம் திகதி வடக்குக் கிழக்குப் போர் முனையில் புலிகளின் தாக்குதல்களால் படையினர் சந்தித்த பெரும் பின்னடைவுகளைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா முன்னெப்போதுமில்லாத அளவு செய்தித் தணிக்கையை அறிமுகப்படுத்தினார். சில வாரங்களுக்குள் அடுத்ததாக மூன்று பத்திரிகைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டது. பத்திரிகைகளில் வெளியான செய்திகள் கட்டுரைகள் பல இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

இலங்கையின் ஊடகவியலாளர்கள் நீதிமன்றங்களிலும் தமது பத்திரிகைகளூடாகவும் இத் தணிக்கைக்கு எதிராகப் கடுமையாகப் போராடினார்கள்.

பின்னர் அரசதரப்பில் லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர போன்றோர் சில வாக்குறுதிகளை வழங்கி இடையிடையே தணிக்கையில் சில தளர்வுகளும் செய்யப்பட்டன. இருந்தாலும் இராணுவச் செய்திகள் மீது 98,99 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தணிக்கைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

தனது புதிய ஆட்சிக்காலத்தை ஆரம்பித்து வைத்து சந்திரிகா நடாத்திய தொடர் நீண்ட பேச்சில் ஊடகத்துறையினரை அவர் சாடியிருந்தவர். தொடர்ந்த காலங்களில் தன்மீது அவதூறு செய்ததாகத் தெரிவித்து ஆசிரியர் விக்டர் ஐவன், சண்டே விடற் வசந்த விக்ரமதுங்க ஆகியோர் கண்டிக்கவும் மிரட்டவும் பட்டனர்.

கடந்த ஆண்டு ஜுன் மாதமளவில் உள்ளூர் செய்தியாளர்களான பி.சீவகன்(பீ.பி.சி. தமிழ்ப்பிரிவு செய்தியாளரும், ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவரும்), றோய் தினேஷ்(சண்டே லீடர்) சமன் வகராச்சி (சண்டிலிடதின் சிங்களப்பதிப்பு) இரிதா பெரமுன) டி.சிவராம்(தராகி - சுதந்திர ஊடகவியலாளர்) ஆகியோர் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டனர்.

ஏப்ரல் 03 இல் ப்த்திரிகையாளர் (வீரகேசரி) நடேசனின் வீட்டின் மீதுக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. ஒக்டோபர் 19இல் பத்திரிகையாளர் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவைதவிர சண்டே ரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் மீதும் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

செய்தியாளர்கள் மீதான பழிவாங்கல்களுக்கு நீதிமன்றங்களும் கூட துணை போயின. சண்டே ஸ்டார் ஆசிரியர் விக்ரமதுங்க, சண்டே ரைம்ஸ் ஆசிரியர் சிஸ்ஹ ரட்னதுங்க ஆகியோர் மீது விதிக்கப்பட்ட நீதிமன்றத் தண்டனைகள் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

என ஊடகவியலாளர் பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்

## நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரை இடமாற்றம் செய்தால் சாத்வீகப் போராட்டம்

**-விவசாய சங்கம் அறிவிப்பு-**

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எம். இரவீந்திரனை இடமாற்றம் செய்தால் நாம் உடனடியாகவே சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என நவகிரி பிரதேச தனலெட்சுமி விவசாய அமைப்புச் செயலாளர் இ.விநாயகம் தெரிவித்தார்.

இது விடயமாகத் தனலெட்சுமி விவசாய அமைப்புச் செயலாளர், காக்காய்ச்சி வட்டை வட்டவிதானை கே. பழனித்தம்பி ஆகியோர் தெரிவிக்கையில், மட்டக்களப்பு நவகிரி பிரிவில் வெல்லாவெளித் தோட்டம் எனும் இடத்தில் ரகுநாதர் அணைக்கட்டு, செங்கலடிப் பிரதேசத்தில் கெக்கரிச் சேனை அணைக்கட்டு, அத்திப முன்மாரி அணைக்கட்டு ஆகியன நீர்ப்பாசனப் பணிப்பாளரின் துரித முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை "நியாப்" நிறுவனத்தின் ஊடாக மேலும் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளார். அண்மையில் உலக வங்கி நிதித் திட்டமிடல் ஆலோசகர் நிகால் ப்ரனாண்டோ பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டார்.

இவைபோன்று பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல இவரின் இடமாற்றம் உடனடியாக இரத்துச் செய்ய வேண்டியது இன்றியமையாதது எனத்தெரிவித் துள்ளனர்.

# கலைஞர்கள் கௌரவிப்பு

(அட்டாளச்சேனை எம்.ஏ.றமீஸ்)

அண்மையில் அட்டாளச்சேனை நியூ லங்கா மெடிக்கல் ஆதரவில் இ.'.வாஸ் இளைஞர் கழகம் சித்தாராவின் இன்னிசை இரவு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெற்றது.

அவ்வேளை சித்தாரா இசைக் குழுவின் ஏ.ஈ. மனோகரன், நிலுக்ஸி ஜெயவீரசிங்கம் ஆகியோருக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர்களான ஏ.ஆர்.எம்.ஜிப்ரி, எஸ்.றபீக், எ.ஏ. ஜபீர், எம்.ஐ.சிஹாமுத்தின், சீதாராமன், ஜுகிபெர்னாண்டோ, நாகபூஷணி ஆகியோருக்கும் மற்றும் பல கலைஞர்களுக்கும் எம்.ஏ.சுமைதீன், இ.'.லாஸ் இளைஞர் கழகத் தலைவர் எம்.எஸ்.எம்.ஐ.'.பர் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

# சிசிலியா கல்லூரியின் 125 வது ஆண்டு நிகழ்வு

(அரியம்)

மட்டுநகரின் சிசிலியா பெண்கள் கல்லூரியின் 125வது ஆண்டுவிழா இவ்வருடம் தொடக்கம் இடம் பெறுகின்றது. இதில் பல்வேறுபட்ட நிகழ்வுகளை நடாத்த இக்கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து செயல்படுகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக இன்று இக்கல்லூரியின் மாணவிகளின் நடை பவனி ஊர்வலம் ஒன்று மட்டுநகரில் இடம் பெறும். இன்று காலை 8.30 மணிக்கு சிசிலியா பெண்கள் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும் இவ்வூர்வலமானது மட்டுநகர் புளியந்தீவு பகுதியிலும் தாண்டவன்வெளியிலும் இடம் பெறும் என இக்கல்லூரி ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இக்கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவின் இறுதி நிகழ்வு இவ்வருட இறுதிப் பகுதியில் இடம் பெறும் எனவும் இந்நிகழ்வில் பல தரப்பட்ட கலை நிகழ்வுகளும், மாணவர்களின் ஆக்கங்களும், விளையாட்டுக்களும் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சிப் பாடசாலைகளைப் புனரமைக்க 30 கோடி ரூபா தேவை

(யாழ் நிருபர்)

யாழ் தென்மராட்சிப் பகுதியில் போரினால் சேதமடைந்துள்ள 75 பாடசாலைகளைப் புனரமைக்க 30 கோடி ரூபாய் தேகை என கல்விப் பணிமனை மதிப்பீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் சேதமடைந்த கட்டிடங்களை புனரமைப்பதற்கு 20 கோடி ரூபாயும் புதிதாக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு பத்துக் கோடி ரூபாய் தேவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கல்விப் பணிமனை வட மாகாணப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# செய்திச்சுருக்கம்

## தற்கொலைப் படையின் குறி மூன்று அமைச்சர்கள் மீது!

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் மூன்று அமைச்சர்களை இலக்கு வைத்து கொழும்புக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்துள்ள உளவு அறிக்கைகளின் படி வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மின் சக்தி எரிபொருள்துறை அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய மூவரையும் தாக்குவதற்குப் புலிகள் இலக்கு வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளைத், தடை செய்வதற்கு அமைச்சர் கதிர்காமர் ஆற்றிய பங்களிப்புக் காரணமாக விடுதலைப் புலிகளின் தலைவர், அவரை துரோகியென்று குற்றம் சாட்டியுள்ளார். மேலும் பாதுகாப்பு பிரதி அமைச்சராகவும் பணியாற்றும் ஜெனரல் ரத்வத்தையைக் கொலை செய்யப் புலிகள் பல தடவைகள் முயற்சி செய்துள்ளனர்.

ஈ.பி.டி.பியின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழர் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து விட்டதால் அவரும் புலிகளின் தாக்குதல் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

தற்கொலைப்படைப் போராளிகள் கடந்த வருடம் நவம்பர் மாதமே கொழும்புக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள் என்றும் உளவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் தெஹிவளையில் புலிகள் பதுங்கி இருந்த வீடொன்று கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் தற்கொலை அங்கிகள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டதை அடுத்து அவர்களது தற்கொலை அங்கிகள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டதை அடுத்து அவர்களது திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## தமிழ் எழுத்துக்கள் மீது தார்ப்பூச்சு.....!

நுவரெலியா நகர வீதிப் பெயர் பலகையிலுள்ள தமிழ் எழுத்துக்கள் சில விஷமிகளால் தார்பூசி அழிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இனவாதத்தைத் தூண்டும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என நுவரெலியா மாநகரசபை பிரதிமேயர் எல்.நேருஜி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் சகதி பூசி அழிக்கப்பட்டது. இந்த வாரம் தமிழ் எழுத்து அழிக்கப்பட்டுள்ளன. இவ்விரு செயல்களையும் இனவாதத்தைத் தூண்டும் ஒரு குழுவினரே மேற்கொண்டு வருகின்றனர் என்பது புலனாகிறது என்றார்.

## கல்கிசை, தெஹிவலை பகுதியில் 23 தமிழர்கள் கைது!

கல்கிசை, தெஹிவலை, பிலியந்தலைப் பகுதிகளில் தேடுதல் நடத்திய பொலிஸாரும், படையினரும், 23 தமிழர்களைக் கைது செய்துள்ளனர். வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் சனிக்கிழமை அதிகாலை வரை நடாத்திய தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெகிவளை வைத்தியா வீதியில் கடந்த திங்கட்கிழமை தற்கொலை அங்கிகளுடன் நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதையடுத்து, மேலும் இருவர் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில் ஒருவர் முஸ்லிம் பெண்ணாவார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவர் இந்த முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த புதன்கிழமை மாலை ஆமர் வீதிப் பகுதியில் தேடுதல் நடாத்திய படையினர் 10 இளைஞர் யுவதிகளைக் கைது செய்துள்ளனர்.

## தென்மராட்சியில் 30 ஆயிரத்துக்கு மேல் மிதி வெடிகள்

தென்மராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாமென உத்தேச மதிப்பீடுகள் காட்டுவதாகக் குடாநாட்டின் 53வது படைப்பணியின் கட்டளைத் தளபதி மேஜர் குலதுங்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை வாணி மகா வித்தியாலயத்தில் சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே மேஜர் குலதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- இந்த மிதி வெடிகளை முற்றாக அகற்றக் குறைந்தது ஆறு மாதகாலமெடுக்கும் என்னும் இராணுவ பொறியியல் பிரிவினர் மூன்று மாத காலத்தில் இவற்றை அகற்ற முடியுமெனக் கருதுகின்றனர்.

இதன் பின்னர்தான் சாவகச்சேரி, நகரப்பகுதி வாணலில், மட் டுவில், சரசாலை, மறவன் புல்லு, தச்சன் தோப்பு, நாவற்குழிப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர். இதற்கிடையில் மக்கள் கால்களை இழப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் விரும்பவில்லை.

தென்மராட்சிப் பகுதியில் கதவைத் திறந்தால், நெல் மூட்டையைத் தூக்கினால், வாசல்படிகளில் இறங்கி மண்ணில் காலை வைத்தால், கொல்லைப்பக்கம் நடந்தால், மிதி வெடிகள் வெடிக்கின்றன. இந்நிலையில் மக்கள் வீடுகள் பார்க்கச் சென்று கால்களை இழக்கக்கூடாது என்றார்.

# ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரஸ் சதி; பலப்பரீட்சைக்குத் தயாரா? வாஜ்பாய் சவால்!

(ஜெய்ப்பூர்)

மக்களவையில் பலப்பரீட்சைக்கு தயாரா? என்று சோனியா காந்திக்கு பிரதமர் வாஜ்பாய் சவால் விடுத்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ரவாத் பட்டாவில் உள்ள அணு மின் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3-வது மற்றும் 4-வது அணு மின் பிரிவை பிரதமர் வாஜ்பாய் நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார். விழாவில் அவர் பேசியதாவது:-

நாட்டின் வளர்ச்சி- வளம் தான் இன்றைக்கு நமக்கு அவசியமானது. இதை நாம் புறக்கணிக்க முடியாது. ஆனால் அரசியல்- தேர்தலில் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று நாட்டின் வளர்ச்சி பாதையில் முட்டுக்கட்டைகளை யாரும் போட வேண்டாம்.

நாடு மிகவும் முக்கியமான காலகட்டத்தை கடக்கிறது. அதே நேரத்தில் வருங்காலத்தில் பெரிய சவால்களை இந்தியா சந்திக்க வேண்டி உள்ளது. இந்தியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தான் இந்த சவால்களை சந்திக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் தங்கள் சொந்த நலனை மனதில் வைத்துக்கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஆனால் கார்கில் போர்- கும்பமேளா போன்ற சம்பவங்களில் இந்தியர்கள் அனைவரும் ஒன்றாக திரண்டனர்.

போலி ராணுவ பேர குற்றச்சாட்டு தொடர்பாக என் தலைமையிலான அரசு பதவிவிலக வேண்டும் என்று காங்கிரஸ் கோருகிறது. ஆட்சியை கவிழ்ப்பதே காங்கிரஸ் கட்சியின் வேலை. ஆட்சியில் அமர்வதற்கு மற்ற கட்சிகளின் ஆதரவை காங்கிரஸ் பெறும்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செய்து வரும் சாதனைகளை கண்டு காங்கிரஸ் அஞ்சுகிறது. என் அரசு நிலையானதாக இருக்கிறது. மேலும் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது. இதனால் தான் என் அரசை கவிழ்க்க காங்கிரஸ் முயற்சிக்கிறது.

**சோனியாவுக்குச் சவால்:-**

மக்களவையில் பலப்பரீட்சைக்கு தயாரா என்று காங்கிரஸ் தலைவருக்கும் (சோனியா) மற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் சவால் விடுக்கிறேன். தைரியம் இருந்தால் என் அரசு மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வாருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

# சிதம்பரம் விலகியதால் அ.தி.மு.க.கூட்டணியில் மூப்பனாருக்குப் புதிய நெருக்கடி

(சென்னை)

சிதம்பரம் விலகியதால் கட்சியின் பலம் குறைந்துள்ளது. இதனால் த.மா.கா.வுக்குரிய தொகுதியைக் குறைக்க ஜெயலலிதா வற்புறுத்தி வருவதால் மூப்பனாருக்கு புது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை பொதுத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி வைத்துள்ளது. அந்த கட்சிக்கு ஜெயலலிதா 27 இடங்களை ஒதுக்கி உள்ளார். த.மா.கா.வை கூட்டணியில் சேர்க்க ஜெயலலிதா தீவிர முயற்சி செய்தார். புதுவையில் காங்கிரஸ் ஆட்சி நடப்பதால் பா.ம.க. சேர்ந்து இருக்கும் அ.தி.மு.க. கூட்டணியில் சேர த.மா.கா.வும், காங்கிரஸ் கட்சியும் முடிவு எடுக்க தயக்கம் காட்டியது.

இதனால் ஜெயலலிதாவின் தூதராக துக்ளக் ஆசிரியர் சோவும், வீரமணியும் அடிக்கடி மூப்பனார் வீட்டுக்கு படை யெடுத்து சென்று பேச்சு வார்த்தை நடத்தினர். அந்த தூதுவர்களிடம் காங்கிரஸ் கட்சியையும் தன்னோடு அழைத்து கொண்டு வருவதாகவும், ஆனால் 2 கட்சிக்கும் சேர்த்து 60 தொகுதி கொடுக்க வேண்டும் என்று மூப்பனார் கூறிவந்தார். இதற்கிடையில் பா.ம.க. இருக்கும் அணியில் நாங்கள் இருக்க மாட்டோம் என்று காங்கிரஸ் போர்க்கொடி தூக்கியது. ஆனாலும் தூதுவர்கள் மூப்பனார் மூலம் தொடர்ந்து சமாதான பேச்சு நடத்தினர்.

அதன்பிறகு கடைசியில் த.மா.கா. மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு 47 தொகுதி கொடுக்க ஜெயலலிதா சம்மதித்தார். இதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்வதையிட்டு த.மா.கா. முக்கிய தலைவரும், முன்னாள் அமைச்சருமான ப.சிதம்பரம் போர்க்குரல் எழுப்பினார். அதிமுக கூட்டணியை மூப்பனார் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஆனால் மூப்பனார் எதையும் கண்டு கொள்ளாமல் இருந்தார்.

இதனால் சிதம்பரம் தனது ஆதரவாளர்களுடன் பேசி, த.மா.கா. ஜனநாயக பேரவை என்ற அமைப்பை தொடங்கினார். த.மா.கா. எம்.எல்.ஏ.க்கள், நகராட்சி தலைவர்கள், முன்னாள் மாவட்ட தலைவர்கள் தங்களது ஆதரவை சிதம்பரத்துக்கு அளித்து வருகிறார்கள். சிதம்பரமும் அதிரடியாக ஜெயலலிதாவை எதிர்த்து பிரசாரம் செய்வதாக அறிவித்து உள்ளார். இதனால் சிதம்பரத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகிறது.

**பிரசாரம் செய்வது யார்?**

த.மா.கா. உடையாமல் இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் அவர்களுக்கு 47 தொகுதியை ஜெயலலிதா கொடுத்தாராம். ஆனால் இப்போது கட்சி உடைந்து பலம் குறைந்துள்ளதால், ஜெயலலிதா தனது தூதர்களை போயஸ் கார்டனுக்கு அழைத்து பேசி உள்ளார். அப்போது த.மா.கா.வில் யாரை வைத்து தேர்தல் பிரசாரம் செய்ய போகிறார்கள். மூப்பனார் பிரசாரம் செய்வாரா? மாட்டாரா? என்று தெரியவில்லை. அவருக்கு உடல் நிலை சரி இல்லை. ஆகையால் சிதம்பரம் போன்றவர்கள் தேர் தல் பிரசாரம் செய்வார்கள் என்று கருதி அதிக ஆசனம் கொடுத்தோம். இப்போது சிதம்பரம் பிரிந்து விட்டதால், த.மா.கா.வுக்கு கொடுத்த 47 ஆசனயங்கள் குறைத்தால் என்ன? என்று கேட்டாராம்.

இதுபற்றி தனது தூதர் மூலம் மூப்பனாரிடம் பேசும்படி கூறினாராம். அவரும் மூப்பனாரை சந்தித்து பேசி வருகிறார். இப்போது த.மா.கா., பா.ம.க.வுக்கு கொடுத்துள்ள தொகுதி கொஞ்ச ஆசனங்களை திருப்பி எடுத்து, அந்த ஆசனத்தை இன்னும் சில உதிரி கட்சிகளுக்கும், சாதி சஙகங்களுக்கும் கொடுத்து அ.தி.மு.க. கூட்டணியை இன்னும் பெரிய கூட்டணியாக்க ஜெயலலிதா திட்டமிட்டு செயல்பட்டு வருகிறாராம். ஆகையால் விரைவில் த.மா.கா.வுக்கு கொடுத்த தொகுதிகளை குறையும் என்று அ.தி.மு.க. வட் டாரங்களில் கூறப்படுகிறது. 47 சீட் டுகளில் த.மா.கா.வுக்கு வெற்றி பெறும் இடங்களை ஒதுக்குவார்களோ? மாட்டார்களோ? என்று கலங்கி கொண்டிருக்கும் மூப்பனாருக்கு இப் போது புது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள 27 தொகுதிகளில் ஐந்தை வேண்டுமானால் எடுத்து கொள்ளுங்கள். அதற்கு பதிலாக புதுவையில் 5 இடங்கள் அதிகமாக கொடுங்கள் போதும் என்று பா.ம.க. தரப்பில் கூறிவிட்டார்களாம். பா.ம.க.வில் 5 தொகுதியை அ.தி.மு.க. எடுத்து கொள்ள சம்மதித்து விட்டார்கள் என்ற தகவலை த.மா.கா. வினரிடம் சொல்லி ஒப்புக் கொள்ள வைக்க தூதர் மூலம் தொடர்ந்து பேச்சு வார்த்தை ரகசியமாக நடந்து வருகிறது.

## கூடுதல் பொறுப்பாக ஜஸ்வந் சிங்குக்கு ராணுவ இலாகா ஒதுக்கப்பட்டது

(புதுடெல்லி)

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் ராணுவத் துறை பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போலி ராணுவ பேரம் தொடர்பாக டெஹல்கா இண்டர்நெட் இதழ் வெளியிட்ட செய்தியையடுத்து ராணுவ அமைச்சர் பொறுப்பில் இருந்து ஜார்ஜ் பெர்னாண்டஸ் ராஜினாமா செய்தார். இந்த நிலையில் ராணுவத்துறை பொறுப்பை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கிடம் வழங்க பிரதமர் வாஜ்பாய் முடிவு செய்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனுக்கு தனது பரிந்துரையை பிரதமர் வாஜ்பாய் அனுப்பி வைத்தார். இதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். இதையடுத்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் ராணுவத்துறை அமைச்சர் பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார் என்று ஜனாதிபதி மாளிகை நேற்று வெளியிட்ட செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியுறவுத் துறையோடு சேர்த்து பாதுகாப்பு துறை பொறுப்பையும் கூடுதலாக கவனிக்க உள்ள ஜஸ்வந்த் சிங்ஏற்கனவே ராணுவத்தில் அதிகாரியாக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டெஹல்கா விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் பதவியில் இருந்து மம்தா பானர்ஜி மற்றும் அஜித் பாஞ்சா ஆகியோர் பதவி விலகினர். இவர்களில் மம்தா பானர்ஜி ரெயில் துறை காபினட் அமைச்சராக இருந்தார். அஜித் பாஞ்சா வெளியுறவுத் துறை இணை அமைச்சராக பதவி வகித்தார். இவர்கள் வகித்து வந்த இலாகா பொறுப்பு வேறு யாருக்கும் வழங்கப்படவில்லை. ரெயில்வே துறையில் 2 இணை அமைச்சர்கள் உள்ளனர். அவர்கள் 2 பேரும் ரெயில்வே இலாகா பொறுப்பை கவனித்து கொள்வார்கள். ஆனால் விரைவில் ரெயில்வே துறைக்கு காபினட் மந்திரி நியமிக்கப்படுவார் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜார்ஜ் பெர்னாண்டசின் சமதா கட்சியை சேர்ந்த மேலும் 3 மத்திய அமைச்சர்கள் தங்கள் ராஜினாமா கடிதங்களை வாஜ்பாயிடம் கொடுத்துள்ளனர். ஆனால் அதை பிரதமர் நிராகரித்துவிட்டார்.

## சாகும் வரை சிறையில் இருப்பதுதான் ஆயுள் தண்டனை; 20 வருடம் அல்ல!

(புதுடெல்லி)

சாகும்வரை சிறையில் இருப்பது தான் ஆயுள் தண்டனை. 20 ஆண்டு தண்டனை முடிந்ததும் வெளியே வர உரிமை கோர முடியாது என்று சுப்ரீம் கோர்ட்டு புதிய தீர்ப்பு வழங்கி உள்ளது.

மேற்கு வஙகாளத்தை சேர்ந்த 4 பேருக்கு ஒரு கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தும் விடுதலை செய்யப்படவில்லை. இதை எதிர்த்து 4 பேரும் சுப்ரீம் கோர்ட்டில் மனு செய்தனர். மனுவை நீதிபதிகள் எஸ்.ராஜேந்திரபாபு, எஸ்.என்.புகான் ஆகியோர் அடஙகிய பெஞ்சு விசாரித்து 4 பேரின் கோரிக்கையை பரிசீலனை செய்யுமாறு மேற்குவங்க அரசுக்கு உத்தரவிட்டது. 4 பேரின் கோரிக்கையை நிராகரித்ததற்கான காரணஙகளை மேற்கு வஙக அரசின் மறு ஆய்வு கமிட்டி சுப்ரீம் கோர்ட்டுக்கு விளக்கியது.

**நீதிபதிகள் தீர்ப்பு:-**

அதைத்தொடர்ந்து நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் கூறி இருப்பதாவது:-

இந்திய அரசியல் சட்டம் 151-வது பிரிவின் குற்றமுறை சட்டம், தண்டனை முறை சட்டத்தின்படி ஆயுள் தண்டனை என்பது 20 ஆண்டுகால சிறை வாசத்துடன் முடிவடைந்து விடுவது அல்ல. ஆயுள் தண்டனை என்பது கைதியின் ஆயுள் முடியும் வரை (சாகும் வரை) சிறையில் இருக்க வேண்டும் என்பது தான். 20 ஆண்டு சிறைத்தண்டனை அடைந்ததும் தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோர கைதிக்கு உரிமை கிடையாது. அவனுக்கு உள்ள ஒரே உரிமை தனது தண்டனை காலத்தை குறைத்து முன் கூட்டியே விடுதலை செய்யும்படி சிறை அதிகாரிகள் மூலம் மாநில அரசுக்கு கோரிக்கை வைப்பது தான்.

**அரசுக்கு உத்தரவு:-**

குற்றம் நடந்த சூழ்நிலை, குற்றத்தின் தன்மை, சிறையில் கைதி நடந்துகொண்ட முறை, அவனை வெளியேவிட்டால் அவன் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு, மற்றவர்களை தூண்டி விடுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றை பரிசீலித்து கைதியின் கோரிக்கை (தண்டனை குறைப்பு) பற்றி மாநில அரசு முடிவு எடுக்கலாம். இந்த அடிப் படையில் ஆயுள் தண்டனை பெற்ற 4 பேரின் கோரிக்கையை மீண்டும் பரிசீலிக்க மேற்கு வஙக அரசுக்கு உத்தரவிடுகிறோம்.

இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் கூறி உள்ளனர்.

# 'மனிதன் வாழும் போதே.......

(6ம் பக்கத் தொடர்ச்சி....)

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.மகேஸ்வரலிங்கம் சிறப்புரை யாற்றுகையில் ஸ்ரீதான்தோன்றிஸ் வரர் ஆலயத்தின் வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆரம்ப காலம், இடைக்காலம் நவீன காலம் என வகுத்து நவீன காலத்தில் ஆலயப்பணிகளை சீர் பெற நிர்வகிப்பதற்கு உறுதுணை யாக நின்று செயல் பட்டவர் த.வ.வி.கதிராமப்போடி அவரின் ஆளு மையைப்பற்றி கதைப்பதானால் கதைத்துக் கொண்டே இருக்கலாம். எந்தப் பணியை ஆலயத்தில் செய்ய வேண்டுமோ அதை மற்ற வர்களின் எதிர்ப்புக்கள் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மிகவும் சுலபமாக செய்து முடிப்பதில் அவருக்கு நிகர் அவரே என்றார்.

முன்னாள் பட்டிப்பளை பகுதி பிரதேச சபை தவிசாளர் அகிலேஸ்வரன் தமதுரையில் ஆலய உற்சவங்களிலும், விசேட பூசைகளிலும் நேரடியாக ஆல யத்தில் பங்குபற்றும் வண்ணக்கர் என்றால் த.வ.வி.கதிராம்போடியார் மட்டுமே என்றார்.

அன்னதானக்குழு உப தலைவரும் புதுக்குடியிருப்பு கி.அ.ச.தலைவருமான மா.சதாசிவம் தமதுரையில் ஓடாமல் பழுதடைந்து இருந்த இவ்வாலய சித்திரத்தேரை திருத்தி கடந்த வருடம் வருடாந்த தேரோட்டத்தை நடாத்திக் காட்டிய பெருமகன் த.வ.வி கதிராமப்போடி யே என்றார்.

இவ்விழாவில் பாராட்டுப் பெற்ற த.வ.வி.கதிராமப்போடிக்கு பொன்னாடையினை சிவஸ்ரீ சாம்ப சிவம் ஐயர் போர்த்தினார். பாராட்டுப் பத்திரத்தினை ஆலய பரிபாலன சபையின் சார்பில் த.தியாகராசா ஆசிரியர் வாசித்து வழங்கினார். பொற்கிளியினை ஆலயபரிபாலன சபையின் வண்ணக்கரும் பொருளா ளருமான க.ஆறுமுகம் வங்கி முகா மையாளர் வழங்கினார்.

ஆலய பிரதம மதகுரு மார்களான சிவஸ்ரீ மு.க சச்சிதானந் தக்குருக்கள், வ.சோதிலிங்கக் குருக்கள் மற்றும் பிரமுகர் களின் குத்து விளக்கேற்றலுடனும், பட் டிப்பளை பிரிவு இந்து ஆலயங் களின் ஒன்றியத்தலைவர் மா.துரை யப்பாவின் தேவாரத்துடனும், ஆல யபரிபாலன சபை உறுப்பினர் செ.ரவிநாதன் ஆசிரியரின் வரவேற் புரையுடனும் இடம் பெற்ற பாராட்டு விழாவில் பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டதுடன் மதிய அன் னதானமும் இடம் பெற்றது. ஆலய பரிபாலனசபை செயலாளரும், வண்ணக்கருமான பா.அரியநேத் திரனின் நன்றியுரை கூறினார்.

# மதுபானசாலையை அகற்ற ஓந்தாச்சிமடத்தில் கோரிக்கை

(க.ஜெகதீஸ்வரன்)

ஓந்தாச்சிமடம் மதுபான சாலையினால் அவ்வூர் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை யும் அசௌகரியங்களையும் அனு பவிப்பதன் காரணமாக இந்த மது பானசாலையை அகற்ற வேண்டும் என அவ்வூர் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ் விடயம் சம்பந்தமாக அவ்வூர் மக்களும், கோயில் தேவஸ் தானங்களின் தலைவர்களும் மேற் படி மதுபானசாலையின் செயற்பாடு களை, அகற்றுவதற்கான காரணங்க ளையும் குறிப்பிட்டு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும், மது வரித் திணைக்களத்திற்கும் மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது. ஓந்தாச்சிமடத்தில் அமைக்கப்பட்டுள்ள மதுசாலை ஒன்று திறந்தவெளி மதுசாலையாக பரிணாமம் பெற்றுள்ளது. மதுசாலை யின் முன்னுள்ள மரத்தின் கீழிருந்து மது அருந்துபவர்கள் போதை தலைக்கேறியவுடன் அப் பாதை யால் பயணிப்பவர்களை வம்புக் கிழுப்பதுடன் பலாத்காரமாக சண்டை யிடும் சம்பவங்களும் நடந்துள்ளன.

இதனால் அக் கிராமத்தில் வழமையாக இருந்து வரும் கிராம உறவுகளுக்குப் பங்கம் ஏற்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அயல் கிராம இளைஞர்கள் ஐவர் இம் மதுசாலைக்கு வந்து சாலையின் பின்னாலிருந்து மது அருந்தி விட்டு அக் கிராமப் பெண்களோடு அவதூ றாகப் பேசியதோடு, நாகரீகமற்ற முறையில் நடந்ததாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனால் சமூக சீர்கேட் டையும், இளைஞர்களைக் காப்பாற் றும் முயற்சியாகவுமே இந்த மதுசா லையை மூடிவிடுவதென முடிவெ டுக்கப்பட்டதுடன் அதற்கான நடவ டிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து ஓந்தாச்சிமடம் இந்துமத மேம்பாட்டு அறநெறிக் கழகம், அரசடி விநாயகர் தேவஸ்தா னம், களுவாஞ்சிக்குடி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீ வடபத் திரகாளியம்மன் தேவஸ்தானம் என்பன அறிக்கை வெளியிட்டுள்ளன.

## பல்கலைக்கழக சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றது

(அஷ்ரப்.ஏ.ஸமத்)

தென்கிழக்குப் பல்க லைக்கழக மாணவ பேரவையினால் வெளியிடப்படவிருக்கும் சஞ்சிகை க்கு கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்ற ஆக்கங்கள் மாணவர்கள், விரிவுரையாளர்களிட மிருந்து கோரப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகைக்கான ஆக் கங்கள் தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களிடம் மாத்திரமன்றி அனைத்துப் பல்கலைக்கழக மாண வர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகி றது. அதேவேளை அனைத்து ஆக் கங்களும் தமிழ் அல்லது ஆங்கில மொழிமூலமானதாக அமைதல் வேண்டும் எனவும் மாணவ பேரவை யின் பத்திராதிபர் ஜுஃஸித் ஏ அஸீஸ் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆக்கங்களின் தர நிரணயம் தொடர்பில் விரிவுரை யாளர் கொண்ட குழுவினரால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே பிரசு ரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும். முதல்தரம் வாய்ந்த ஆக்கங்கள் தரநிர்ணயக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பட்டு அவை பத்திரிகை யில் பிரசுரிக்கவும், பரிசுகள் வழங் கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளது எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டாம் பருவகாலத்துக்குள் வெளியிடப் பட்டிருக்கும் இசசஞ்சிகை வெளி யீட்டின் போது மாபெரும் கலை நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்பட்டு வருவதும் குறிப் பிடத்தக்கது.

அனைத்து ஆக்கங்களும் பத்திராதிபர், மாணவர் பேரவை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு இம்மாத முடிவுக்குள் அனுப்பிவைக்க வேண் டும்.

## நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பணியில் சாரணியம்

(மருதமுனை நிருபர் எம்.ஐ.எம்.வலீத்)

நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பணியில சாரணியம் முன்னிற்கின்றது. அந்த வகையில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சாரணிய ஸ்தாபகர் பேடன் பவலை நினைவு கூர்ந்து சாரணர் பாசறைகள் நடைபெறுவதன் மூலம் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைகிறது.

இவ்வாறு மருதமுனை கிளியர் சேர்குரூ சேவிஸ் முகா மைத்துவப் பணிப்பாளரும், கோல்ட் மைண்ட் விளையாட்டுக் கழக போச கருமான இஸட்.ஏ.எச்.றகுமான் தெரி வித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் அனு சரணையுடன் நடைபெற்ற இரு நாள் சாரணர் பாசறையின் முதல்நாள் நிகழ்வு ஷம்ஸ் கடற்கரை மைதா னத்தில் கடந்த சனிக்கிழமை கோட் டக் கல்விப் பணிப்பாளர் அல்-ஹாஜ் ஏ.அலாவுதீன் தலைமையில் நடை பெற்ற போது அதில் பிரதம அதி தியாகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

## அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2000ம் ஆண்டுக்கான பரிசு விழா

(ஒலுவில் நிருபர்)

பிரபல எழுத்தாளரும், கவிஞரும், நாடகாசிரியரும், நாட்டா ரியல் ஆய்வாளரும், விமர்சகருமான சட்டத்தரணி, கலாபூஷணம், அல்-ஹாஜ் எஸ். முத்துமீரான் எழுதிய "இயற்கை" என்னும் உருவகக் கதைகளின் தொகுதி அரச கரும மொழிகள் திணைக்களத்தின் 2000ம் ஆண்டுக்கான பரிசு வழங்கலுக் காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 50 உருவகக் கதை களைக் கொண்ட இத் தொகுதியைப் பற்றி பிரபல கவிஞரும் மூத்த எழுத்தாளருமான வல்லிக்கண்ணன் குறிப்பிடுகையில் வாழ்க்கை கற்றுத் தருகின்ற உண்மைகளையும், இயற்கையின் தன்மைகளையும் எடுத்துச் சொல்லி மக்களின் மன திலே பதியவைப்பதற்கும், சிந்திக் கத்தூண்டுவதற்கும் இந்த "இயற் கை"யின் உருவகக்கதைகள் மிக வும் உறுதுணையாய் அமையும் என்று கூறியுள்ளார்.

எதிர்வரும் 2001 ஏப்ரல் 09ம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் இடம் பெறவிருக்கும் மொழிகள் தின விழாவில் இந்த "இயற்கை" உரு வகக் கதைகளுக்கான பரிசையும் விருதினையும் கலாபூஷணம் முத்து மீரான் பெறவிருக்கிறார்.

## பேலியகொடையில் 32 பேர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

பேலியகொட பொலிஸா ரால் சந்தேகத்தின் பேரில் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என பேலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணிமுதல் 9 மணிவரை இடம் பெற்ற தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளர்.

இத் தேடுதல் நடவடிக் கையானது கிரிபத்கொட, வனவாசல, இயகம, பேரியகொடப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து தடுத்து வைத்து விசார ணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.


**தினக்கதிர் ஓராண்டு நிறைவையொட்டி**

**தினக்கதிர் ஆதரவுடன்**

**எருவில் இளைஞர் கழகமும் கண்ணகி விளையாட்டுக் கழகமும்**

**இணைந்து நடாத்தும்**

**கலை, கலாசார போட்டியும் நிகழ்வுகளும்**

**போட்டிகள்**

**1. பாடல்**
1. கிராமியப் பாடல்கள்
2. நம்நாட்டுப் பாடல்கள்
3. கர்னாடகப் பாடல்கள்
4. தென்னிந்தியச் சினிமாப் பாடல்கள்

**2. ஆடல்**
1. கூத்து மற்றும் கிராமிய ஆடல்கள்
2. பரதம்.
3. மேலைத்தேய ஆடல்.

**3. நடிப்பு**

**4. அறிவிப்பாளர்**

**போட்டி நிபந்தனைகள்**
- வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- அனைத்தும் தனிநபர் நிகழ்ச்சிகளே
- ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். (விண்ணப்பங்கள் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும்)
- போட்டிக்கான நுழைவுக்கட்டணம் 100/=(காசுக்கட்டளை மூலம் அனுப்பலாம்)
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி : 30.03.2001
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

விண்ணப்பங்கள் மற்றும் 100/=க்கான காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:

**செயலாளர்**
**இளைஞர் கழகம்**
**பாடசாலை வீதி,**
**எருவில்-களுவாஞ்சிக்குடி.**

வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம்**

இங்கே வெட்டவும் ✂

1. முழுப்பெயர் :
2. முகவரி :

3. அடையாள அட்டை இல:
4. கலந்து கொள்ளும் போட்டி: (விபரமாகக் குறிப்பிடவும்)

போட்டி நிபந்தனைகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் வதுடன் போட்டி சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

திகதி:........ கையொப்பம்

**இணை விளம்பர அனுசரணை**
**சக்தி FM & TV**
**IBS-களுவாஞ்சிக்குடி.**



**'தினக்கதிர்' ஓராண்டு நிறைவையொட்டி**

**வாசகர்களுக்கான போட்டிகள்**

**1. சிறுகதைப் போட்டி :-**
சமூக மேம்பாட்டை கருப்பொருளாகக் கொண்டு 1500 சொற்க ளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**2. கவிதைப் போட்டி :-**
50 வரிகளுக்கு மேற்படலாகாது

**நிபந்தனைகள் :-**
- **தினக்கதிர் நிறுவனத்தில் கடமை புரிபவர்களும் அவர்களின் குடும் பத்தினரும் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.**
- **'தினக்கதிர்' வாசக நெஞ்சங்கள் அனைவரும் வயது வித்தியாசங்கள் இன்றி இப்போட்டியில் பங்கு பற்றலாம்.**

பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். *30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு "ஓராண்டு நிறைவு வாசகர் போட்டி"

'தினக்கதிர்',
த.பெ.இல.06
மட்டக்களப்பு

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
வெற்றியீட்டிய வாசகர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்.
வெற்றியீட்டிய சிறுகதை/ கவிதை தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்.
வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் தினக்கதிர் ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

இப்பகுதி வாசகர்களாகிய உங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானம் மற்றும் கலை, இலக்கியம் சார்ந்த உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் நீங்கள் எழுதலாம். இனி இது உங்கள் பக்கம்.

**ஆசிரியர்**

# விடுதலைப்புலிகள் என்ற பெயரில் தமிழ் மக்களை ஒடுக்கும் செயல்!

வே. நவீரதன்
கிழக்குப்பல்கலைக்கழகம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு என்பது இன்று ஜனனமாகும் ஈழத்தமிழ் மகன் முதல், விடுதலைக்காய் தம்முயிரை துச்சமென நினைத்து இன்று கல்லறையில் சமுதாய விடுதலைக்காய் ஏங்கும் மாண்ட வீரர்கள் வரை தெரிந்த, புரிந்த ஒன்று. ஒரு இனம் தொடர்ச்சியாக உரிமைகள் மறுக்கப்பட்டு, அது சுயமாக வாழ நாட்டின் பேரினவாதம் தடையாக அமையும் போது அவ்வினம் விடுதலையை முதலில் அகிம்சை வழியில் அடைய எத்தனிக்கும். அது தொடர்பான நடைமுறை சரிவராத வேளை தம் விடுதலையை அடைய அவ்வினம் ஆயுத ரீதியாக போராட்டம் நடாத்தி தம் சமுதாயத்தின் விடுதலையை மீட்டெடுப்பது யதார்த்தம். அவ்வகையில் தமிழ் மக்கள் பேரினவாதிகளாலும், பேரினவாத தாபனங்களாலும் ஒடுக்கப்பட்டு அவர்களது சமய, சமூக, கலாசார, கல்வி, பண்பாட்டு, நாகரிக அம்சங்கள் நசுக்கப்பட்ட வேளை, அத்தோடு பேரினவாதம் தமிழ் மக்களது மரபு வழித் தாயகமான வடக்கு கிழக்கில் பல குடியேற்றங்களை மேற்கொண்ட வேளை, தாங்க முடியாது, தம்மினம் அழிவதனை சிறிதேனும் பொறுக்க முடியாது. அதனை அதாவது தமிழினத்தின் எதிர்கால நலனுக்காகவும், தமிழ் இனத்துக்கு உயிரூட்டவும் பல கட்சிகளும், இயக்கங்களும் உதித்தது. இரு தசாப்த காலத்துக்கு உட்பட்ட அதன் பரினாம வளர்ச்சியே தமிழீழ விடுதலைப் புலிகள் என்பது இன்று நாம் பேரினவாதத்துக்கோ அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களுக்கோ கூறி விளங்க வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நடைமுறை ஈழத்தமிழ் மக்களது வாழ்க்கை முறையே இதனைப் பறைசாற்றி நிற்கின்றது.

ஓர் இனத்தின் விடுதலைக்காக, ஓர் இனத்தின் தொடர்ச்சியான நலனுக்காக, இருள்மண்டித் தடுமாறும் ஜீவன்களுக்காக, தம் உரிமையை கேட்கும் அமைப்பை இன்று இலங்கை அரசு சர்வதேச பயங்கரவாதமாகத் தடை செய்யும்படி நாடுகளை வேண்டுவது நிச்சயமாக அந்நாட்டின் நீண்டகால நலனுக்கு பாதகமாகவே அமையும் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. பிரச்சினைகள் புரிந்துணர்வுகள், விட்டுக்கொடுப்புக்கள் மூலமே தீர்க்கப்பட வேண்டியவை. இலங்கை அரசின் இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறை சமுகவியல், உளவியல், புவியியல் ரீதியாக தப்பானதாக அமைவதைக் காணலாம்.

நாட்டின் இறைமையில் அக்கறை செலுத்தும் இலங்கை அரசு, ஏன் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி எடுக்கும், பல சொத்துடமைகளை நாசமாக்கும் போரை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதாலும், அதற்கு இருக்கும் சர்வதேச செல்வாக்கினை முறியடிப்பதனாலும் நீண்ட கால நோக்கில் விடுதலைப்புலிகளை இன்றும் தெளிவாக கூறுவதாயின் தமிழ் மக்களையே ஒடுக்கி நாட்டில் பௌத்த சாசனத்தையும், இறைமையையும் பாதுகாக்கலாம் என்பது அரசினும் பேரினவாதிகளதும் பேராசையாக, இலக்காக இருக்கலாம்.

எது எப்படி இருந்தாலும், பேரினவாதத்தின் பேச்சால் பிரிட்டிஷ் புலிகளை சர்வதேச ரீதியாக தமது நாட்டில் தடை செய்தமை இலங்கை தமிழ் சிறுபான்மை மக்களைப் பொறுத்த வரை பேரதிர்ச்சியான விடயமாகும். ஓர் இனத்தின் மலர்ச்சிக்கு தமது உயிரையே துச்சமென நினைத்துப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடைசெய்தமைக்கு பிரிட்டிஷ் உள்நாட்டு செல்வாக்கு(தேர்தல்) காரணமாக இருந்தாலும் விடுதலைப்பாதைக்கு வழிகாட்ட வேண்டிய பிரிட்டன் அதனை நசுக்குவதற்கு இங்கு முற்பட்டுள்ளமை தெளிவாகிறது.

நோர்வேயின் ஆதரவுடன் பேச்சுவார்த்தைக்கு மணி கட்ட முற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பிரிட்டன் தடைசெய்வது கண்டு ஈழ மண்ணில் உறங்கும் கல்லறைகள் மீண்டும் ஈழமண்ணில் போராட எழ முற்படுவது போல் நடுங்குகின்றன. ஜனனித்த மழலைகள் முகம் கண்ணீர் வடிக்கிறது. ஆனால் இன்றைய இந்த அழிவுகளுக்கு பங்குதாரர்களான பேரினவாதிகளும், பௌத்த சாசன அமைப்புகளும், பேரினவாத தொடர்பு ஊடகங்களும் ஆனந்தக் கண்ணீர் நல்கின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. எது எப்படி அமைந்தாலும் ஈழத்தமிழன் ஒருவன் இருக்கும் வரை விடுதலைப்போராட்டம் போராட்டமாக பேரினவாதத்தை உலுக்கும் என்பது தெரியாதது போலும்.!

❋❋❋❋

# நவீன சமூகத்தில் ஆண்மேலாதிக்கம் குறைகின்றது!

ச.மயூரவதனன்
வவுனியா வளாகம்
யாழ் பல்கலைக்கழகம்

தினக்கதிர் பத்திரிகையில் கருத்தரங்கு என்ற பக்கத்தில் 09-03-2001 திகதி பிரசுரமாகிய ''நவீன சமூகத்தில் ஆண் மேலாதிக்கமும் பெண்களும்'' என்ற கட்டுரைக்குப் பதில் எழுதுவதாக இது அமைகின்றது.

பிரசுரித்த கட்டுரைக்கு நவீன சமூகம் என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருப்பது பொருத்தமற்றதாக இருக்கின்றது. ஏன் எனில் அங்கு குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் நவீன சமூகத்திற்கு பொருத்தமற்றதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. நவீன சமூகத்தில் பெரும்பாலும் கல்வியறிவுடைய சமுதாயம் வாழ்ந்து கொண்டு இருக்கும். குடும்பங்களில் பிரச்சினைகளை அவர்களுக்குள்ளே பேசி தீர்த்துக் கொள்வார்கள். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையாலும், சுயமாக தாங்களே சிந்தித்து செயற்படக் கூடியதாக இருப்பதனாலும் ஆணாதிக்கமோ, பெண்ணாதிக்கமோ இங்கு பெரிதாக பெரிசுபடுத்தப்பட மாட்டாது.

உண்வு தயாரித்தல், அல்லது சமைத்தல் குழந்தைகளை வளர்த்தல், அழுக்கு உடைகளைக் கழுவுதல், மற்றும் வீடும், வீடு சார்ந்த சுற்றுச் சூழல் துப்பரவு செய்யும் வேலைகள் போன்றவற்றை வீட்டுப் பெண்தான் செய்ய வேண்டும் என சமுதாய நடைமுறை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் வகுத்துக் கொண்ட சமுதாய நடைமுறைகளை நாங்கள் தான் கலைத்துக் கொள்ள வேண்டும். அது இப்போது நடைபெறுகின்றது. வீட்டிலுள்ள ஆண்கள் உணவு தயாரிக்கவில்லையா? குழந்தை வளரக்கவில்லையா? உடைகளைக் கழுவவில்லையா?, வீடுகளைத் துப்புரவு செய்வதில்லையா? தற்காலத்தில் எமது பிரதேசங்களில் எமது கண்முன்னாலேயே ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால், இருவரும் இணைந்து இவைகளை செய்வதை காணலாம்.

ஒருவர் வேலைக்குச் செல்வதானால் மற்றவருடன் இணைந்து ஓய்வு நேரங்களில் தங்கள் பொறுப்புக்களைச் செய்வதைக் காணலாம். நவீன யுகத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை மருவி தனிக்குடும்ப வாழ்க்கை வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த கால்கட்டத்தில் இரு பாலாரும் இணைந்து தங்கள் வேலைகளை பிரித்து செயற்பட்டால் தான் இனிமையான குடும்ப வாழ்க்கையினைத் தொடரலாம்.

தமிழ் சமுதாயத்தில் நிலவுகின்ற கற்பு என்ற கோட்பாடு ஆண் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் கோட்பாடு என கூறப்பட்டுள்ளது தவறானதாகும். ஏனெனில் கற்புக்கரசி என கிழக்கிலங்கை மக்களால் போற்றி வழிபடப்படும் கண்ணகியின் பெயருக்கே களங்கம் இளைப்பதாய்ப்போய்விடும். கற்பு என்பதற்கு அர்த்தமுள்ள இந்து மதத்தில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகின்றார். கற்பு என்பது பெண்ணுக்கும் ஆணுக்கும் உண்டு. ஆனால் சமுதாயம் பெண்ணின் கற்பையே உயர்த்தி வைக்கின்றது. கற்பு என்பது வெறும் உடம்பிலுள்ளது மட்டுமல்ல உள்ளம், செயல், ஆத்மீகம் போன்றவற்றை இணைத்தது இதற்கு உதாரணமாக கண்ணகியினை எடுத்துக் கொண்டால் கண்ணகி கோவலனை மணம் முடித்து அவனையே தனது கணவனாக மனதிலே இருத்தி இறுதி வரை கோவலன் ஓர் நல்ல ஆண்மகனாக திருந்தி தன்னுடன் வந்து சேர்வான் என்ற நல்ல சிந்தனையுடன் தூய உள்ளங்கொண்டு இறைவனை வணங்கினாள். கோவலன் திருந்தி திரும்பி வந்தான். சிலம்பு விற்கச் சென்றதால், கள்வன் என கொலையுண்டான். அரசனின் அநீதியை கண்ணகி எடுத்துக்கூறி தன் கணவன் கள்வனல்ல என நிரூபிக்கின்றாள். இது தான் சிலப்பதிகாரம். இதில் என்ன கற்பு. கண்ணகியின் உள்ளம், செயல், ஆத்மீகம், உடம்பு அனைத்துமே சுத்தமாக இருக்கின்றது. ஒரு மனிதன் வளமாக வாழ்வதற்கு இவை அனைத்தும் சுத்தமாக ஒழுங்காக அமைய வேண்டும்.

கணவன் இறந்த பின்னரோ அல்லது விவகா ரத்துக்குப் பின்னரோ, மறுமணம் செய்ய முடியாது என்ற சமுதாய நியதி இப்போது எங்கே இருக்கின்றது. பெண்கள் மறுமணம் முடிக்கவில்லையா. திருமணமாகி குழந்தைகளைப் பெற்று கணவன் இறந்த பின்னர் பலர் மறுமணம் முடித்து மிகச் சந்தோசமான வாழ்க்கை வாழ்கின்றார்கள். ஆனால் சில பெண்கள் மறுமணத்தை விரும்புவதில்லை. அதற்கு சமூகமா பொறுப்பு தனது குடும்ப நலனை கருத்தில் கொண்டு செயற்படுகின்றார்கள்.

ஒவ்வொரு ஆணின் மனதிலும் பெண்கள் மீதான ஆதிக்க உணர்வு கணிந்து கொண்டு இருக்கும் என்பது முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். இது போன்ற சொற் பிரயோகங்களால் சில ஆண்கள் ஆதிக்க உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு தள்ளப்படுகின்றார்கள். ஆண்கள் என்றால் மிருகங்களல்ல அவர்களும் மனிதர்கள் தான். மனிதமாண்பும் இருக்கத்தான் செய்கின்றது. ''மனிதன் - ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்ற கவிதை வரியுள்ளது. ஒரு ஆணை சிறந்த ஒருவனாக சமுதாயத்தில் நல்லவனாக நற்பண்பு உள்ளவனாக மாற்றுவது பெண்(தாய்,மனைவி) ஆனால் அவனை தீய வழிக்கு இட்டுச் செல்பவர்களும் அவர்களே. இங்கு ஆண்கள் மீது பெண்ணாதிக்கமே மேன்மையாகவுள்ளது. ''கதைப்பது அது செய்து, இது செய்து என்று சொல்வது மட்டும் ஆதிக்கமல்ல, ஒருவர் கூறியதற்காக தன்னையே வருத்தி அதை நிறைவேற்றும் போது அவன் ஆதிக்கத்துக்குள் உட்படுத்தப்படுகின்றான். பொதுவாக பெண்களின் ஆதிக்கம் மேலோங்கி ஆண் பலவற்றை செய்து அவன் தீயவனாகவோ அல்லது நல்லவனாகவோ வருகின்றான்.

நவீன சமுதாயத்தில் ஆணும், பெண்ணும் தங்களுக்கிடையே ஆதிக்கங்கள் செலுத்தி நல்லதொரு அபிவிருத்தியை அடையமுட்படுகின்றார்கள். அவை அனைத்தும் நல்லதாக அமைய நல்ல மனதுடன் தூய சிந்தனையுடன் செயற்படுவோம்.

◆◆◆◆

# ''மனிதன் வாழும் போதே பாராட்டப்பட வேண்டும்''

(அரியம்)

ஒரு மனிதன் வாழும் போதே பாராட்டப்பட வேண்டும். இறந்த பின்பு பாராட்டப்படுவது பாராட்டுப்பெறுபவரை சென்றடையாது என மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் 40 வருட காலமாக வண்ணக்கராகவும், செயலாளராகவும் இறைபணியில் சேவையாற்றிய அம்பிளாந்துறையை பிறப்பிடமாகவும் அரசடித்தீவை வதிவிடமாகவும் கொண்ட சிவநெறிச்செம்மல் த.வ.வி.கதிராமப்போடி வண்ணக்கருக்கான சேவை நலன் பாராட்டுவிழா கடந்த ஞாயிறு ஸ்ரீதான் தோன்றிஸ்வரர் ஆலயத்தில் அதன் தலைவர் அ.இராசதுறை தலைமையில் இடம் பெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கலாசார உத்தியோகத்தர் க.தங்கேஸ்வரி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இறைபணியில் தொடர்ந்து 40 வருடங்களாக ஒரு ஆலயத்தில் வண்ணக்கராக கடமை புரிவது என்பது இலேசான காரியமில்லை. இவரின் சேவை திருப்தியுடனும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும், தீர்க்க தரிசனத்துடனும் இருந்தமையாலேயே இவ்வாறு 40 வருடங்கள் பணியாற்றினார். கிழக்கு மாகாணத்தில் சுயம்புலிங்கேஸ்வரராக குடிகொண்ட பூர்வீக ஆலயத்தின் வளர்ச்சி இவரின் பங்களிப்பு அளப்பரியது.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட சிவயோகச் செல்வன் சிவஸ்ரீ சாம்பசிவம் ஐயர் தம்துரையில் வண்ணக்கர் என்பவர் எப்படி வாழவேண்டும். வண்ணக்கருக்கான வரைவிலக்கனத்துடன் வாழ்ந்தவர் ஆலயப்பணிகளை மேற்கொள்ளும் போது மிகவும் துணிவுடனும் எதிர்ப்புக்களை பொருள்படுத்தாது தாம் எண்ணிய கருமத்தை நிறைவேற்றும் நோக்கில் செயல்வடிவத்தில் காட்டி செயல்பட்டவர். இவ்வாறான ஒருவருக்கு கொக்கட்டிச் சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயப் பரிபாலன சபை பாராட்டுவது பொருத்தமானது என்றார்.

(5ம் பக்கம் பார்க்க)




# கிறிக்கட் போட்டியில் மட்/வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை முதலிடம்!

(காந்தன்)

மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கிறிக்கட் சுற்றுப்போட்டி மட்/இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



இதில் மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளான ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம், மட்/இந்துக் கல்லூரி, மட்/விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம், மட்/சிசிலியா பெண்கள் பாடசாலை, மட்/மகாஜனக்கல்லூரி, மட்/வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலை உட்பட ஆறு பாடசாலைகள் கலந்து கொண்ட போதிலும் இறுதிப் போட்டிக்காக மட்/வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலையும், மட்/மகாஜனக் கல்லூரியும் தெரிவாகின. முதலில் துடுப்பெடுத்தாடிய வின்சன்ற் பாடசாலை மாணவிகள் 15 ஓவர்களில் மூன்று விக்கட்டினை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஆட்டமிழக்காமல் ஒரு சிக்சர். ஏழு பவுண்டரிகள் அடங்கலாக கஜேந்தினி 49 ஓட்டங்களைப் பெற்றார். அதே கல்லூரியை சேர்ந்த எஸ்.கவிதா 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய, மகாஜனக் கல்லூரி மாணவிகள் 15 ஓவர்களில் மூன்று விக்கட்டினை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தயாளினி 13, அனுலாசாந்தி




18(ஆ.இ), கனிஸ்ரா 17(ஆ.இ) பெற்றனர். மேலதிக 60 ஓட்டங்களினால் வின்சன்ட் மகளிர் அணியினர் வெற்றி பெற்றனர்.

இவ் இறுதிப் போட்டியில் சிறந்த ஆட்டக்காரருக்கான பரிசினை வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த எஸ்.கவிதாவிற்கும் தொடர் ஆட்டத்திற்கான சிறந்த பரிசினை



மிருனாளினிக்கும் 117/5 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கட்டினை கைப்பற்றியமைக்காக வழங்கப்பட்டது. சிறந்த களத்துடுப்பாளராக மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ரம்யாவிற்கு




வழங்கப்பப்பட்டது. மற்றும் வின்சன்ட் உயர்தர பாடசாலை மாணவியான எஸ்.கவிதாவிற்கும் மகாஜன கல்லூரி மாணவியான கனிஸ்ரா விற்கும் ''கற்றிக்'' முறையில் ஆட்டமிழக்க செய்தமைக்காக சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்நிகழ்வில் லயன் கழகத்தினரும் ஆர்.சி - டி.சியினரும் கல்விப்பணிப்பாளர்களும் கலந்து கொண்டு பரிசில்களும் வழங்கி வைத்தனர்.

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(முபா)

கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது ஐக்கிய தாமரை மைதானத்தில் இடம் பெற்ற பாலர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் 83 புள்ளிகளைப் பெற்று பச்சை இல்லம் வெற்றியீட்டியது.

சாய்ந்தமருது அல் அமீன் சமூக அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டியில் இரண்டாம் மூன்றாம் இடங்களை சிவப்பு, நாவல் இல்லங்கள் பெற்றுக் கொண்டன.

அல் அமீன் சமூக அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் எம்.ஏ.எம்.மன்சூர் தலைமையில் இடம் பெற்ற இப்போட்டியில் சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.எம். உதுமாலெப்பை, கல்விக்கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா, அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். பாலர்களின் உடற்பயிற்சிப் போட்டி சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றது.



நேற்றைய ஆட்டத்தில் 147 ரன்கள் குவித்து நாயகனாக திகழ்ந்த ஆஸி.வீரர் ஹெய்டன்



ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டியை காண வந்த இளம் ரசிகைகள் தங்கள் முகத்தில் தேசிய கொடியை ஆர்வத்துடன் வரைந்து கொண்ட காட்சி

## பங்களாதேஷ் பயிற்சியாளராக அவுஸ்திரேலியா ரெவர் சப்பின் தெரிவு

பங்களாதேஸ் தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ரெவர் சப்பின் நியமிக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான்களான ஐயன், கிரேக் சப்பல் சகோதரர்களின் இளைய சகோதரரான ரெவர் 3 டெஸ்ட், 20 ஒரு நாள் போட்டிகளில் அவுஸ்திரேலியா சார்பில் பங்கு பற்றியவர்.

அடுத்த மாதம் பங்களாதேஷ் சிம்பாபேயுடன் 2 டெஸ்ட் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாட சிம்பாவே செல்லவிருப்பதால் புதிய பயிற்சியாளர் தெரிவு இடம்பெற்றுள்ளது.

பங்களாதேஷ் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பத்தாவது நாடாகும். தனது கன்னி டெஸ்ட் போட்டியில் இந்தியாவுடன் விளையாடி தோல்வியடைந்தது. சிம்பாபேயுடன் போட்டியிட அடுத்த மாதம் மேற்கொள்ளும் கிரிக்கெட் சுற்றுலா பங்களாதேசின் முதலாவது வெளிச்சுற்றுலா என்பது குறிப்பிடத்தக்கது.

# வாசகர் நெஞ்சம்

## நன்னீர் மீன் வளர்ப்பு பேட்டிக்கட்டுரையாளரின் பதில்

கடந்த 2001.02.17ம் திகதியன்று நன்னீர் மீன் வளர்ப்பு சம்பந்தமாக கச்சேரியைச் சேர்ந்த எஸ்.தவபாலரெட்ணம் அவர்களின் பேட்டி என்னால் எடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது. இப்பேட்டியில் சில பிழைகள் இருப்பதாக தினக்கதிர் வாசகர்(பல்கலைக்கழகம்) ஒருவர் சுட்டிக் காட்டி இருந்தார். இது தொடர்பாக பேட்டி கண்டவர் என்ற வகையில் நான் சில விடயங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய கடமைப்பாடு எனக்கு உண்டு. எனது நோக்கம் மீன் வளர்ப்பு விடயம் மக்கள் மனதைச் சென்றடைந்து மக்கள் நன்மையடைய வேண்டும் என்பதாகும். ஊக்கமுள்ளவர்களையும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் ஒன்றிணைய வைப்பது இதன் கருத்தாகும். ஒரு தொழில்சார் விடயத்தினை பேட்டி கண்டு பத்திரிகையின் ஒரு பக்கத்தில் முடித்துவிட முடியாது. அவ்வாறு பேட்டி காணும் போதும் அதை எழுத்து வடிவில் ஆக்கும் போதும் தவறுகள் ஏற்படுவது புதிதல்ல. முதலாவதாக

நமது நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் ஒரே மீனுக்கு பலவேறுபட்ட பெயர்கள் வழங்கப்படுகின்றன. உதாரணம் ''திலாப்பியா'' விற்கு மாவட்டத்தின் தென்பகுதியில் ''செப்பலி'' என்று கூறுவார்கள். அதே மீனுக்கு மட்டு நகரில் ''யப்பான்'' என்று கூறுவார்கள். அதே போல் பழுகாமத்தில் ''வெல்லியாப்பொடி'' என்று அழைக்கப்படும் மீன் உன்னிச்சை பகுதியில் ''மொண்டான்'' என்று அழைக்கப்படுகின்றது. இப்போது கித்துள், றூகம் ஆகிய குளங்களில் ''றோகு'' மீன் பிடிபடுகின்றது. அங்கே ''றோகு'' என்று இந்த மீனை யாரும் அழைப்பதில்லை. இதனை இங்கு ''செங்கணையான்'' என்றே அழைக்கின்றனர். ஒரு மீனுக்கு மக்கள் வெவ்வேறு பெயர்கள் வழங்குவது இதிலிருந்து விளங்கும்.

பங்கசு என்ற சொல்லாட்சி நான் பத்திரிகைக்கு எழுதும் போது என்னால் ஏற்பட்ட தவறு. அவ்விடத்தில் பிளங்ரன் என்ற சொல்லும், 2 சதுர மீற்றர் பரப்புக்கு ஒரு மீன் என்ற அடிப்படையில் வளர்ப்புக்கு விட வேண்டும் என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்க. 10பேர்ச் அளவு தடாகத்தில் மீன் வளர்க்கின்ற போது 50 கிலோ காய்ந்து தூளாக்கிய சாணம், 8கிலோ யூறியா, 0.2 கிலோகிராம் பொட்டாஸ், 1 கிலோ சுப்பர் பொசுபேற் என்பன மீன்வளர்ப்புக்கு 15 நாளைக்கு முன் இட வேண்டும். பின்பு ஒவ்வொரு மாதத்திற்கு பின்பும் காய்ந்து தூளாக்கிய சாணம் 30கிலோ, யூறியா 5கிலோ, பொட்டாஸ் 0.1கிலோகிராம், சுப்பர் பொசுபேற் 0.5 கிலோகிராம் என்பன இடம் பெறவேண்டும். தண்ணீரில் பிளங்கரனின் வளர்ச்சி அதிகமாகி தண்ணீர் கடும் பச்சை நிறமானால் இதன் அளவைக் குறைக்க வேண்டும். அல்லது முற்றாகத் தவிர்க்க வேண்டும். தவிடு, குறுணல் என்பன மீனுக்கு உணவாக இடலாம். மீன் உண்டு எஞ்சிய நீரில் கரையும் அளவுக்கு உணவு விகிதம் இருக்கக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால் நீர் மாசுபடுத்தப்படும். இதை மீன் வளர்ப்பாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இவைகளை ஏற்கனவே நான் எழுதியிருந்தேன். அச்சில் தவறுதல் ஏற்பட்டு விட்டது. இது சாதாரணமானது

**திக்கவயல்**
**சி.தர்மகுலசிங்கம்**
**மட்டக்களப்பு**

## கணபதிப்பிள்ளை வீதியை கவனிப்பார் இல்லையா?

ஆரையம்பதி மூன்றாம் குறிச்சி கணபதிப்பிள்ளை வீதி குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது. வீதி அமைத்து 10 வருடமாக இன்னும் கிறவலையோ, தாரையோ அறியாமல் இருக்கிறது இந்த வீதி.

இவ்வீதி மக்கள் நடமாட்டம் உள்ள வீதியாகும். தற்போது இவ்வீதியை இரு மருங்கிலும் உள்ள மண்ணும் மரங்களும் ஆக்கிரமித்துள்ளது. இவ்வீதியால் துவிச்சக்கர வண்டியில் செல்வது கூட பெரிய சாதனை தான்.

இவ்வீதி கிறவலை மட்டும் அல்ல மின்சார ஒளியைக் கூட இன்னும் காணவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை மக்கள் பாவனைக்கு செப்பனிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.கிருபாகரன்**
**ஆரையம்பதி**

# சமாதானப் பேச்சில் இன்னமும் இணக்கமில்லை — சொல்ஹெய்ம்!

(நமது நிருபர்)

**இலங்கையில் போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் படிப்படியாக நெருங்கி வருவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆயினும் இரு தரப்புக்கும் இடையே இன்னமும் கணிசமான இடைவெளி இருக்கவே செய்கிறது.**

இரு தரப்பினருமே போர்நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடித்துக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதா? அல்லது மோதல்கள் தொடருகின்ற சூழ்நிலையிலேயே பேச்சை ஆரம்பிப்பதா? என்பன போன்ற முக்கிய விடயங்களில் இன்னமும் முரண்பாடு காணப்படுகின்றது நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்குத் தூதர் சொல்ஹெய்ம் அளித்துள்ள பேட்டி யிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

*பிரிட்டனில் அமுலுக்கு வந்துள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் போராட்ட அமைப்புக்களைத் தடைசெய்யும் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் சேர்த்திருக்கும்

*பிரிட்டிஷ் அரசின் தீர்மானத்தினால் சமாதான முயற்சிகளுக்கு இதுவரை பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. காலப்போக்கில் இது விடயத்தில் நிலைமை எவ்வாறு அமையும் என்று எதிர்வு கூறமுடியாது.

*விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யும் நோக்கம் எதுவும் நோர்வேக்குக் கிடையாது. சர்வதேசப் பயங்கரவாதத்தை நோர்வே எதிர்க்கின்றது.

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொண்டுவரும் அனுசரணை முயற்சிகளில் தற்போதைய நிலவரம் குறித்து இந்திய அரசுக்குக் கடந்த வியாழக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

முதற்சமயம் ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியுடன் பேசும் உத்தேசம் இல்லை. அவருடனான அடுத்த சந்திப்பு கொழும்பிலேயே இடம்பெறும்.

இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுக்கு முன்னரான புரிந்துணர்வு' உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடச் செய்வதற்கு அடுத்த சந்திப்பின்போது தீவிர முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறேன்.

பேச்சுக்கள் தொடர்பான கால அட்டவணையை வெளிவிட முடியாது. பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் என்பதைத் தற்போதைக்கு என்னால் கூறமு டியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமானால் அதை அமுல் செய்வது தொடர்பாக கண்காணிப்பதற்கான குழு குறித்து இலங்கை பத்திரிகைகளில் வெளியான விபரங்கள் வெறும் வதந்தியே யாகும். இப்படியான பட்டியல் விவரம் குறித்து இந்தியத் தரப்பில் இருந்து ஆட்சேபம் எதுவும் வரவில்லை. உண்மையில் எனது முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்குகின்றது. என்னுடன் நடத்திய பேச்சுக்களின்போது இந்திய வெளிவிவகார அமைச்ச ஜஸ்வந்த்சிங் எனது முயற்சியைப் பெரிதும் பாராட்டினார்.

## இளம் பெண்களை கடத்தி இம்சைப்படுத்திய சந்தேக நபர்கள் மூவர் விளக்க மறியல் !

(எஸ்.கமலதாஸன்)

இளம் பெண்களை இம்சைப்படுத்தியதாக கூறி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டிருக்கும் மூன்று இளைஞர்களை யும் எதிர்வரும் 23ம் திகதி வரை தடுப்பு காவலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் ஏ.எல்.அப்துல்கபூர் உத்தரவிட்டுள் ளார்.

இது பற்றி களுதாவளையைச் சேர்ந்த தேவநாயகம் தவமணி பொலிஸிருக்கு கொடுத்த தகலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

சம்பவதினம் இரவு வீட்டிற்குள் வந்த ஆறுபேர் தங்களை இயக்கமெனக் கூறிக்கொண்டு மல்லிகா,மல்லிகா,என சத்தமிட்டனர் அப்போது நானும் எனது தாயாரும் சிறியதாயான மல்லிகாவும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தோம்.

சிறிது நேரத்தில் எனது தாயார் கதவைத் திறந்து கொண்டு குப்பிலாம்பு வெச்சத்துடன் சென்ற வேளை எனது தாயாரை அங்கு நின்றவர்கள் வீட்டுக்குள் போட்டு பூட்டிவிட்டு என்னையும் எனது சிறிய தாயான் மல்லிகாவையும் காட்டுப் பக்கம் கூட்டிச் சென்றனர்.அப்போது நாம் ஒழித்துக் கொண்டோம் என முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயநாத் தலைமையிலான குழுவினர் சந்தேக நபர்களான மூவரை கைது செய்தனர்.

களுதாவளை நான்கைச் சேர்ந்த செல்வராசா-லவன், முத்துலிங்கம்-இளங்கோ,தங்கராசா -சிறிகரன், ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருக்கும் நபர்களாவர்.

இதேவேளை நாராயணன் கிருபா என்பவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர்.

**கோரகல்லிமடுவில் ..........**

அங்கு இவர்களை விசாரணை செய்த படை. அதிகாரி இராணுவச் சீருடையை பயன்படுத்தி வீதி நாடகம் நடித்தது குற்றமானதாகும் என்று. கூறியதுடன் தம்மிடம் அனுமதி பெறாது இவ்வாறான நாடகம் நடித்ததும் பிழையான விடயமாகும் என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து கோரகல்லிமடுவில் நாடகம் நடத்துவதென்றால் சந்திவெளி படை முகாமில் அனுமதி பெறவேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

மட்டக்களப்புக்கு இவர்கள் செல்வதற்கு அனுமதி வழங்கிய படை அதிகாரி மட்டக்களப்பில் இந்நாடகம் நடத்துவதென்றால் அங்குள்ள படை அதிகாரியின் அனுமதியைப் பெற்று நடத்துமாறும் கூறியுள்ளார்.

தடாகம் அலுவலகத்தில் இந்நாடகம் ஆரம்பித்து சிறிது நேரத்திலே படையினரால் இவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். 90 நிமிடங்களைக் கொண்ட இந்நாடகம் சுமார் 30 நிமிடம் மாத்திரமே நடிக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தைக் கண்டு கழிப்பதற்குப் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் என சுமார் முந்நூறு பேர் அளவில் அங்கு கூடியிருந்தனர்.

படையினரின் இச்செய்கையால் மனப்பாதிப்புக்கு உள்ளான இந்நிறுவனத்தினர் நண்பகலுக்குப் பின்னர் மட்டக்களப்புக்குப் பயணமாகியுள்ளனர்.

**தொழுநோயாளர் ............**

மற்றும் வைத்தியசாலை உபகரணங்கள் என்பவற்றை ஒப்டைப்பது சம்ப்ந் தமாக நடவடிக்கை எடுக்கவுள் ளதாகவும் நேற்று தொலைபேசியில் தெரிவித்துள்ளனர்.

இந்த உத்தரவுகளை அடுத்து தமிழ் நோயாளர்கள் அதிருப்தி அடைந்து காணப்படுகினறனர்.கடந்த 1926ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வைத்தியசாலையில் தற்போது 28 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் தமிழர்கள் 9பேர் முஸ்லீம்கள் 4பேர் 15பேர் சிங்களவர்கள்.

50க்கும் 60 வயதுக்குட்பட்ட மேற் படி நோயார்களில் 8பேர் பெண்கள் இவர்களில் ஒரு தமிழ் பெண் பறங்கியர் இனப் பெண் ஒருவர் ஏனைய ஆறுபேரும் சிங்களவர்கள்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றும் 30 ஊழியர்கள் வேறு வைத்தியசாலைக்கு இடமாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னரும் இவ் வைத்தியசாலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பல்வேறு மட்டத்தில் இருந்து விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து இவை கைவிடப்ப ட்டதாகவும் தெரிவிக்கபடுகிறது.

**அரசு போரை நிறுத்த.....**

தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. நேற்றைய சந்திப்பின்போது இந்தியாவில் தாம் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை சொல்ஹெய்ம். பாலசிங்கத்துக்கு விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை மேலும் ஒருவாரம் நீடிக்கும் வாய்புகள் குறித்தும் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசியதாகவும் அறியவந்தது.

## 'தினக்கதிருக்கு' நன்றி தெரிவிக்க வேண்டும்

(கல்முனை)

கிழக்கு மாகாணத்தில் வெளியாகும் பத்திரிகையான தினக் கதிருக்கு நன்றி தெரிவிக்க வேண் டும் என் நிந்தவூர் பிரதேச சபை நலன்புரிச் சங்க செயலாளரும் கல்முனை பிரதேச தினக் கதிர் செய்தியாளருமான ஜனாப் யூ.எம். இஸ்ஹாக் இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டு ள்ளார்.

மேலும் அக்கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டம் ஹற்றனில் நடைபெற்ற போதெல்லாம் கிழக்கு மாகாண த்தில்' வெளிவரும் ஒரே ஒரு நாளிதழ் பத்திரிகையான 'தினக்கதிர்' தோட்டத் தொழிலாளருக்காவும் ஏழை மக்களுக்காகவும் அதன் முழுப் பங்களிப்பை செலுத்துவதில் தவறவில்லை.

சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றியடைந்ததும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இச் சத்திக்யாகிரகப் போராட்டத்திற்கு உறு துணையாக இருந்த அனைத்து அமைப்புக்கும் ஒன்றிணைந்து இச் சத்தியாகிரகப் போராட்டம் வெற்றியடைய ஒத்துழைத்தவர்களுக்கு இப் போராட்டத்தை இந் நாட்டில் உள்ளவர்கட்கு வெளிக்கொணர்ந்த குறிப்பிட்ட சில ஊடகத் துறையினருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியா கும் ஒரே ஒரு நாளிதழ் தினக்க திர் பத்திரிகைக்கு நன்றியைத் தெரிவிக்காததை மனவேதனை யோடு தெரிவிக்கிறோம்என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளருக்கு ஜனாப் யூ.எம்.இஸ் ஹாக் எழுதிய கடித த்தில் குறிப்பிட்டுள்ளார்.

## உண்மையான நீதிக்கும் சட்டத்திற்கும் இடம் கொடுக்க வேண்டும்.

*புலிகளின் தலைவர் பிரபாகரன்*

(வவுனியா நிருபர்)

நமது மக்களின் பாதுகாப்புக்கும் நலன்களிற்கும் உகந்ததாக எமது நீதிமுறை இருக்க வேண்டும்.என விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

ஞாயிறன்று வன்னியில் நடைபெற்ற நீதியாளர் சட்டவாளர் உறுதிப் பிரமாணம் எடுக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் நாம் உணர்வுகளுக்கு,உணர்ச்சிகளுக்கு உறவுகளுக்கு முதலிடம் கொடுக்காமல் உண்மையான நீதிக்கும் அதனடிப்படையில் உருவான சட்டத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்.

நீதி செலுத்த போது எப்போதும் நீதியின் பக்கம் நின்று பக்கம் சாராது கடமையை செய்ய வேண்டும்.

சட்டங்கள் யாவற்றையும் முன்னர் ஒவ்வொரு நாடுகளும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே உருவாகியிருக்கின்றன.நாம் இவ்வாறு இல்லாது மக்களின் நலனுக்கு உகந்ததாக காலத்திற்கு உகந்தவகையில் சட்டத்தை உருவாக்க அந்த சட்டத்திற்கு ஏற்றவாறு நீதியையும் செலுத்த வேண்டும்.எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒரு நிமிட அக வணக்கத்துடன் நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் கிருபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புலிகளின் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், மதிவர்மன், சுடர், ஒப்பிலான் ஆகியோரும் தொடர்ந்து மேன்முறையீட்டு நீதியரசர்கள், மேல் நீதியரசர்கள் மாவட்ட நீதியரசர்கள் சட்டவாளர்கள் ஆகியோர் உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் ஏற்றி வரப்படுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பாரையும் சமாதான மேசைக்கு கொண்டு வர நோர்வே எடுத்துவரும் முயற்சிகள் ஒருபுறம் நடந்தாலும், அரசு திட்டமிட்டபடி முப்படையினரையும், துணை ஆயுதப் படைகளையும் பலப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபடும் என்றும் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையும் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளது. அதேவேளை தப்பியோடி பின்னர் சரணடையும் படையினரை சாதாரண படையினரை நடத்துவது போன்றே நடத்து மாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அதிகாரிகளுக்குப் பணித்திருக்கிறார்.

படைகளில் இருந்து தப்பியோடியோரில் சுமார் 3,500 பேராவது மீண்டும் வந்து இணைந்து கொள்வார்கள் என்று இராணுவத் தலமையக வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.